தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 சிலை (16-12-1987) திச-87 85 காசுகள் (இதழ் எண்: 96)

சிங்களப் படையை விட இந்தியப் படை நூறு பங்கு கொடுமை!



O இந்திய அரசு, இலங்கையிலுள்ள இந்தியப் படைக்காக ஆண்டுதோறும் உரு. 15000 கோடி உருபாவைச் செலவழிக்கத் திட்டமிட்டிருக்கிறது. ஒரு நாளைக்கு 6 கோடி உருபா அளவில் இப்பொழுது செலவாகிக் கொண்டுள்ளது.

O இலங்கையிலிருந்து இங்கு வருபவர்கள் இந்தியப் படையின் அழிவைப் பற்றி ஏராளமாகச் சொல்கிறார்கள்.

O இந்தியப் படையினரால் நாள்தோறும் 500 செல்களுக்கு மேல் ஏவப்படுகின்றன. சிங்களப் படையினர் கூட ஒரு நாளுக்கு 40, 50 செல்கள் வரைதாம் பயன்படுத்தினர்.

O இந்தியப் படையினர் புலிகளை அழிப்பதாகக் கூறிக் கொண்டு பொது மக்களை அழிக்கின்றனர். அவ்வகையில் ஏறத்தாழ ஐயாயிரம் பேரை அழித்திருக்கின்றனர். கட்டடங்களைத் தீக் கொளுவுகின்றனர். பெண்களைக் கற்பழிக்கின்றனர். கடைகளை, நகைகளைக் கொள்ளையிட்டுச் சூறையாடுகின்றனர். வயல்களை, விளைவுப் பொருள்களை அழிக்கின்றனர். மரங்களை வெட்டிச் சாய்க்கின்றனர்; பல ஆயிரக் கணக்கான இளைஞர்களைச் சிறைப் படுத்தியிருக்கின்றனர். ஏறத்தாழ 1500 விடுதலைப் போராளிகளைச் சுட்டுக் கொன்றிருக்கின்றனர். 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை வீடற்றவர்களாக ஆக்கி, படைத்துறை ஏதிலியர் தங்கவைப்புகளில் அடைத்து வைத்துள்ளனர். மற்றும் 50 ஆயிரம் பொதுமக்கள் காடுகளில் ஒளிந்து கொண்டிருக்கின்றனர்;

O சிங்களப் படையினர் பயன்படுத்திய படைக்கருவிகளை விட 50 — 100 மடங்கு ஆற்றல் வாய்ந்த எண்ணிக்கை மிகுந்த கருவிகளையும் குண்டுகளையும், ஊர்திகளையும் பயன்படுத்துகின்றனர்.

O சிறைப்பட்ட நூற்றுக் கணக்கான போராளிகளை அந்தமானில் உள்ள இந்தியச் சிறைக்குக் கொண்டு போய் அடைத்துள்ளனர்.

O அவர்கள் செய்யும் கொலை வெறியாட்டங்களும். படுகொலைகளும் முன்னர் பங்களாதேசில் செய்தவற்றையும் விடக் கூடுதலானவை; கொடுமையானவை!

O திசம்பர் 3-ஆம் பக்கல், யாழ்ப்பாணம்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

ஐயோ தமிழகமே!

இலங்கை ஏதிலிகளின் துன்பம்!

இலங்கையிலிருந்து ஏறத்தாழ 5 இலக்கம் ஏதிலிகள் (அகதிகள்) தமிழ் நாட்டில் தங்கியுள்ளனர். அவர்களுள் 15 ஆயிரம் பேரே ஒருவாறு நல்ல நிலையில் உள்ளனர். மீதிப் பேருள் பெரும்பாலோர் கொத்தடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றனர். ஒப்பந்தக்காரர்களின் தொல்லைகள், துன்புறுத்தல்களால் அவர்கள் தொல்லைப் படுகின்றனர். இத் தொல்லை தாங்காமல் பல பெண்கள் தற்கொலை செய்து கொண்டனர். நெய்வேலியில்மட்டும்32பெண்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். வறுமை, பட்டினி, மற்றும் நோயினால் 40,000 பேர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களில் பல குடும்பங்களுக்கு எந்த வேலையும் தரப்படவில்லை. அவ்வாறு பலர் ஆந்திரம், கருநாடகம், நீலமலை, வால்பாறையில் உள்ளனர். இலங்கை ஏதிலிகளுக்கென்றே தமிழக அரசால் உருவாக்கப் பெற்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்படுவதில்லை. வெறும் பேச்சளவோடு இத்திட்டங்கள் உள்ளன. இவ்வாறு இலங்கை ஏதிலிகள் குழுவின் ஆளுமைச் செயலர் அருள்திரு. அந்தோனி சாமியும், சென்னையில் உள்ள தகவல் நடுவத்தின் இயக்குநரான ஆர். ஆர். சிவலிங்கமும், மதுரையில், கடந்த நவம்பர் மாத இறுதியில் செய்தியாளர்களிடம் சொல்லி வருத்தப் பட்டுள்ளனர்.

தில்லி தமிழ்நாட்டைப் புறக்கணிக்கிறது!

காவிரிநீர்ச் சிக்கல் இன்று வரை தீர்க்கப் பெறாமல் இருப்பதற்குத் தில்லியே முழுக் காரணமாக உள்ளது. இது போலவே **அமராவதி ஆற்று நீர்த்திட்டம்** ஏறத்தாழ 15 ஆண்டுகளாகவும், **சண்முகா ஆற்றுத் திட்டம்** 9 ஆண்டுகளாகவும், **பவானி கட்டளைக் கால்வாய்த் திட்டம்** 4 ஆண்டுகளாகவும் நடுவணரசின் அனுமதிக்குக் காத்திருக்கின்றன. **காவிரி நீர்த்திட்டமோ** கடந்த 25 ஆண்டுகளாக நடுவண் அரசின் இசைவிற்குக் காத்திருக்கிறது.

தஞ்சைப் பெரியகோவில் பகுதியில் வீணாக வெளியேறி வரும் எரிவாயுவைப் பயன் படுத்தி 5 மெகாவாட் மின்சாரம் உருவாக்க முடியும். இதற்குத் தில்லியரசு இசைவு தரவில்லை. அனுமதிக்கப்பட்ட அனல்மின் நிலையங்களுக்கு ஆசுத்திரேலியாவிலிருந்து நிலக்கரி இறக்குமதிக்குத் தில்லியரசு மறுப்புத் தெரிவித்து விட்டது. இதுபோல் பல புதிய தொழில்கள் தொடங்கவும் இசைவு தரப்படவில்லை. தமிழ் நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கும், வறட்சி நீக்கத் திட்டங்களுக்கும் கேட்கும் தொகையில் 10 விழுக்காடுகள் உதவி கூடக் கிடைப்பதில்லை. திட்டமிட்ட ஏறத்தாழ 10 அணைக் கட்டுகள் நடுவணரசின் முழுவுதவி கிடைக்காததால் கைவிடப் பட்ட நிலையில் உள்ளன. இவை பற்றியெல்லாம் 13-11-87-இல் நடந்த சட்டப் பேரவையில் மின்துறை அமைச்சர் வி. வி. சாமிநாதன் தில்லி மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதாக, ஓர் ஒப்பாரியே வைத்துள்ளார்.

கல்வித்தரம் குறைவு!

தமிழகத்தில் கல்வித்தரம் குறைந்து விட்டது என்று கல்வியமைச்சர் பொன்னையன், சட்டப் பேரவையிள் சலிப்படைந்து பேசியுள்ளார். நவ. 24. இல் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக விழாவொன்றில்தான் அவர், ஐ. ஏ. எசு, ஐ. பி. எசு, தேர்வுகளிலும், பொறியியல் தேர்வுகளிலும் வெற்றிபெறும் தமிழக மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டதாகத் தலைமேல் அடித்துக் கொண்டுள்ளார்.

கல்விக்காகத் தமிழக அரசு வருமானத்தில் 21 விழுக்காடு ஏறத்தாழ 734 கோடி உருபா ஆண்டுதோறும் செலவிடப் படுகிறது. ஆனால் தமிழகத்தில் பட்டம் பெற்றவர்கள் ஒன்றரை இலக்கம் பேருக்கு ஏற்கனவே வேலை இல்லை.

இந்நிலையில், பொன்னையன் யாரை நொந்து கொள்கிறார் என்று தெரியவில்லை. தமிழக முதல்வருக்கே வெளிச்சம்!

கலப்படத் தமிழ்நாடு!

தமிழ்நாட்டுப் பங்கீட்டுப் பொருள்கள் அனைத்திலும் கலப்படம். உணவுப் பொருள் பங்கீட்டு அட்டைகளில் கள்ள அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. பங்கீட்டுக் கடைகளில் கொடுக்கப்படும் அரிசி, சருக்கரை, கோதுமை அளவுகள் பெருமளவு குறைத்துக் கொடுக்கப் படுகின்றன. அவை கள்ளச் சந்தையில் விற்பனையாகின்றன. பல விடங்களில் அவை முழுவதுமே மக்களுக்குக் கொடுக்கப்படாமல் கள்ளச் சந்தைக்குப் போகின்றன. இவ்வாறு கலப்படம், கள்ளச் சந்தை, குறைந்த அளவீடு காரணமாக இதுவரை 2,232 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பண்ணுருட்டி இராமச்சந்திரன் கணக்குக் கொடுத்துள்ளார். இதில் என்ன வேடிக்கையென்றால் இவர்களில் பெரும்பாலோர் பணம் படைத்த வணிகர்கள். இவர்களுக்கு எதிராக யாரும் சான்றளிப்பதில்லை. இப்படிப் பட்டவர்களைச் சிறு வணிகர்கள் காட்டிக் கொடுப்பதில்லை; எனவே தப்பி விடுகிறார்கள் என்கிறார் அமைச்சர் இவர்களையெல்லாம் பதவியில் அமர்த்திய பொதுமக்களுக்குத்தான் தண்டனை தரவேண்டும்!

குடிநீரில் தூய்மைக்கேடு!

சென்னை நகரில் வண்டிகள் வழியாகத் தரப்படும் குடிநீர் 9.35 விழுக்காடு தூய்மையில்லை. அதுவுமன்றி எடுத்துக்கொண்டு வரப்படும் தண்ணீரில் 32 விழுக்காடு வரை வழியிலேயே ஒழுகி விடுகி-

Scanned with CamScanner

றது -என்று தொழில் நுட்பக் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் முறையீடு செய்துள்ளார். அரசினர் இந்த முறையீடுகளையெல்லாம் எங்கே காதில் போட்டுக் கொள்கின்றனர்? அவர்களுக்குத்தான் கொள்ளையடிக்கவே நேரம் போதவில்லையே!

நகரங்களா, நரகங்களா?

இந்தியா உரிமை பெறுவதற்கு முன் 90 விழுக்காட்டு மக்கள் சிற்றூர்ப் புறங்களில் வாழ்ந்து வந்தனர். நகரங்களில் 10 விழுக்காட்டு மக்களே வாழ்ந்தனர். இந்த நிலை மாறி இப்பொழுது மொத்த மக்களில் 100-க்கு 52 பேர் நகரங்களிலும் 48 பேர் சிற்றூர்களிலும் வாழ்கின்றனர். அதனால் நகரங்களில், மக்கள் நெருக்கடி 5,6, மடங்கு கூடி விட்டது. அத்துடன் கால் நடைகளும் நகரங்களுக்கு வந்து விட்டன. இதனால் நகரங்கள் நரகங்களாக நாறத் தொடங்கி விட்டன. மக்கள் மக்களாக இல்லை. தண்ணீர்த் தட்டுப்பாடு, உணவுப் பற்றுக்குறை, விலை வாசி ஏற்றம், தூய்மைக் கேடு, நோய்ப் பரவல், ஒழுக்கக்கேடு, திருட்டு, கொள்ளை, கொலை முதலியவை பன்மடங்கு மிகுந்து விட்டன. இவற்றுக்கு முடிவு எங்கே? எப்பொழுது? மக்களெல்லாம் பலவகையிலும் மாண்டுபோன பின்னர் தான் கிடைக்கும்! இவைபற்றி யெல்லாம் கவலைப்பட யார் இருக்கிறார்கள்?

ஆன்மீக உணர்வு அதிகரிப்பா? வீரப்பனார் மகிழ்ச்சி!

அண்மையில் தமிழகத்தில் ஆன்மீக உணர்வு (வெங்காய உணர்வு; அப்படி ஒன்றுமேயில்லை. 'ஐயோ அப்பா' பக்தர்களும், மருவத்தூர் சிவப்பு வேட்டி, சேலைகளும், தெருவுக்குத் தெரு, ஊருக்கு ஊர் பறையடிப்புக் கொட்டுமேளம், ஒலிபெருக்கித் தெருவிழாக்களும் மிகுந்து வருவதைத்தான் — ஆன்மீக உணர்வு) அதிகரித்து வருவதாக, நம் மறுபிறவி அமைச்சர் வீரப்பன் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார். 'ஆன்மீகம்' என்றால் வீரப்பனுக்குத் திரைப்படத்தில் வருகிறதே நடிக, நடிகையர் 'சாமி'க் கதை — அதுதான் என்று நினைக்கிறார் போலும். பசி, பட்டினிகள், கொலை, கொள்ளைகள், பட்டைச் சாராயப் பெருக்கங்கள், 'கலக்கல்' சாவுகள், அரசு, பொதுமக்கள் ஒழுக்கக் கேடுகள் —இவையெல்லாம் இவர் சொல்லும் 'ஆன்மீக' உணர்வை விடப் பல நூறு மடங்கு பெருகியிருக்கின்றனவே, இதற்கென்ன சொல்கிறார் வீரப்பன்?

4 இலக்கம் கள்ளச்சாராய வழக்குகள்!

தமிழ்நாடு முழுவதும் நான்கு இலக்கம் (400000) கள்ளச்சாராய வழக்குகள் இன்னும் முடிவுறாமல் உள்ளன என்று காவல்துறை ஆணையர் தேவாரம் கூறியிருக்கிறார். இவற்றுள் சென்னை நகரில் மட்டும் 26000 வழக்குகள் நிலுவையில் உள்ளனவாம். நல்ல சாராய வழக்குகள் எத்தனையோ? போடப்பட்ட மொத்த வழக்குகள் கணக்கில் சொல்லப்படவில்லை. ***புண்மனச் செம்மல் இராமச்சந்திரன்*** ஆட்சியில், கள்ளச்சாராயமும், பட்டைச் சாராயமும், பிராந்தி, விசுக்கி, சின், ரம், முதலிய சீமைச் சாராயமும் தாம் ஆறாய்ப் பெருகி நீராய் ஓடிக் கொண்டிருக்கின்றன. திரைப்படங்கள் செழு செழு வென்றும், குளு குளு வென்றும் வளர்ந்து பெருகித் தமிழக மக்களையே திக்கு முக்காடச் செய்கின்றன. விளையாட்டுப் போட்டிகளின் மகிழ்ச்சி ஆரவார ஒலி விண்ணைப் பிளக்கிறது ஒலி, ஒளிகளின் கூட்டுக் சேர்க்கைப் பரவலால் மக்கள் மகிழ்ச்சிக் கடலில் மிதக்கின்றனர். ஆனால் குடிக்க நீரில்லை; உண்ண உணவில்லை; இருக்க விடில்லை! ஐயமே இல்லை; ***செருப்புவள்ளல், புண்மனச் செம்மல்*** காலம் அவரைச் சார்ந்த கொள்ளையர்க்கெல்லாம் ***பொற்காலமேதான்!*** வாழ்க புண்மனச் செம்மல்!

குடிநீரைச் சாராயமாக்கி விட்டுக் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்!

சென்னைப் பெருநகரப் பெருங்குடி நீர் மற்றும் பெருவடிகால் பெருவாரியப் பெருந்தலைவர் பெருவீரன் சேப்பியார் ஒரு பெருந்தெரிவிப்புச் செய்துள்ளார். அதுதான், '***மிக. அதிக அளவில், அதிகச் செலவில்*** (அவர் அடிக்கப் போகும் கொள்ளைக் கணக்கையும் சேர்த்து ஆண்டு ஒன்றுக்கு 30 கோடி உருபாச் செலவில்) ***கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்!*** இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மட்டும் தொடக்கத்தில், (சும்மா, வெறும்) 150 கோடி உருபாதான் (இவருக்கு எத்தனை கோடி சேருமோ தெரியாது) செலவாகுமாம்! அதுவும் ஒரு குத்து மதிப்பாகச் சொல்கிறாராம். (பின்னால் 150 என்பது 500 ஆனாலும் கேள்வி கேட்பார் — யார்?).

நெய்வேலியிலிருந்து இன்னும் 100 ஆண்டுகளுக்கு (நாமெல்லாரும் அப்பொழுது இருக்கமாட்டோம்! நல்ல வேளை!) அதிக அளவில் நிலக்கரி கிடைக்கும் ***வாய்ப்புள்ளதால்,*** (என்ன வாய்ப்போ) திட்டத்தை நெய்வேலி நிலக்கரியைக் கொண்டு நிறைவேற்றுவதற்கு ***ஏற்ற வகையில்*** (அ'து எந்த வகையோ?) வடிவமைக்கும் படி (அ'து என்ன வடிவமோ? — அவருக்கே தெரிந்த — கைவந்த — ஒரு கள்ளச் சாராயக் கலையாக இருக்குமோ, தெரியவில்லை.) கேட்டுக் கொண்டிருப்பதாக அவர் கூறியிருக்கிறார்.

இதுமட்டுமில்லை இத்திட்டத்தை நிறைவேற்ற அமெரிக்க நிறுவனங்களின் பெரிய பெரிய பெயர்களையெல்லாம் கூறி, அவர்களின் தூய்மை செய்யும் கருவிகளெல்லாம் இறக்குமதி செய்யப்படும்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

—தொடர் — 4

அரப்பா நிலத்தில் வாழ்ந்த மக்களின் நிலை
(Reading the Mind of the Harappans.)

முனைவர். எச். டி. சங்கலியா

மொழியியல் ஆய்வுகளிலும் தொல்லியல் ஆய்வுகளிலும் ஒரே நேரத்தில் தம் கருத்தைப் பெறமுயன்றதால் ஈராசின் கருத்து பிறழ நேர்ந்தது. மேலும் அவரின் கருத்தாக, திராவிடர்கள், இந்திய மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டு சுமர், மேலை ஆசியா, நடுத்தரைக்கடல் நாடுகளுக்குக் குடி பெயர்ந்து சென்றவர்கள் என்று குறிப்பிடுகின்றார். ஒரு குடி மரபு, குடிப்பெயர்வு, இனம், கலை முதலியவற்றின் கால வரிசைக்குத் தொல்லியல், மொழியியல் ஆய்விற்கு அடுத்துதான் மறுஆய்வே. ஆனால் இதைப்பொறுத்தவரை ஈராசின் கருத்துக்குச் சார்பாகத் தொடர்ந்து 25 ஆண்டுகளாக எந்த சான்றும் அமையவில்லை. இதற்குமாறாக முந்தை எளம் (எளம் என்பது பழையநகர். இது பாரசீகக் கடலுக்கு வடக்கிலும், டைகிரிசுக்குக் கீழ் கிழக்கிலும் இப்போதைய குசித்தான் (Khuzistan) பகுதியாக உள்ளது. அங்கு ஒட்டுநிலையாகத் திராவிட மொழியைப் போன்ற ஒரு மொழி பேசப்பட்டது. அண்மையில் அமெரிக்கர்களால் தென்ஈரான் பகுதியில் தோண்டி யெடுக்கப்பட்டவை. குசித்தானை விடப் பழைமை வாய்ந்ததாக அறிவதால் முந்தை எளம் என்று குறிப்பிடப்படுகிறது.) இப்போதைய யகா என்னும் தென் ஈரானிலும் முந்தை திராவிடத்தைப் போல ஒரு மொழி பேசப்பட்டது. அம்மொழி குசித்தானை விட மிகப் பழைமையானது என்றறியப்பட்டது. ஈராசின் கொள்கையை இது மறுக்கும் வண்ணம் உள்ளது. இதன்படி ஈராசின் ஆய்வு அறிவியலுக்குப் புறம்பானது. ஆனால் அவ்வாறு முழுவதையும் ஒதுக்கிவிடுவது நேர்மையானதாகாது.

நாற்பதாண்டுகளுக்குப் பிறகு பேர்செர்விசு ஈராசின் பாதையைத் தொடர்ந்தார். அவரும் சிந்து எழுத்துகளை ஆய்ந்து, அவை முந்தை திராவிடர்களுடையவை என்று ஆய்ந்தார். அவரின் ஆய்விற்குத் திரவிட சொற்பிறப்பியல் அகராதியைப் பயன்படுத்திக் கொண்டார். கல், கரி ஆய்வுகளையும் மேற்கொண்டார். அதன் சார்பில் சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களுடையது என்றும் படிப்படியாக அது சுருங்கித் தென்னிந்தியாவில் திட்பமாக வந்துள்ளது, இந்தத் திரவிடர்தாம் தமிழர்—தமிழ் நாடாக ஆனதெல்லாம் என்றும் கூறுகிறார்.

ஈராசும், பேர்செர்விசும் சிந்து எழுத்துகளை ஒன்றாகவே கண்டறிந்துள்ளனர். சில எழுத்துகளை மட்டுமே மாறுபாடாக ஆய்வு செய்துள்ளனர்.

எழுத்துகளைக் கண்டறிதலிலும் படங்களின் பொருளைக் கூறுதலிலும் பொறுத்தவரை எடுத்துக் கொண்டால், ஏறக்குறைய இருவரும் பொருந்துகின்றனர். இவ்வாறு வேறுபாடு வருகிற திரவிடத்தைச் சார்ந்த கருத்துகளில் எது சரி, எது அடிப்படையுடன் கூடியது என்று நாம் கூற இயலவில்லை. எவ்வாறாயினும் 175 பட எழுத்துகளைச் செர்விசு படித்த நிலையை ஆய்ந்து பார்க்கும் போது, பேர்செர்விசின் ஆய்வுகள் நிலைத்தவை என்று கூற முடிகிறது. ஆய்வாக எடுத்துக் கொள்ளாமல் நம்பிக்கையில் கூறுவதானால் இவர் சரி தவறு என்று கூடக் கூறிவிட முடியும். ஆனால் கல், செப்புக் கலைப் பொருள்கள், கீறிய வடிவம் இவற்றின் புள்ளி விளக்கங்களைப் பொறுத்தவரை பேர்செர்விசு சரியாக இருக்கலாம் என்று கூறி விடலாம்.

கல், செப்புக் கலை பொருள்களைப் பொறுத்தவரை இந்தியாவில் மிகுதியான அளவில் தொல்லாய்வு செய்ததன் வழி, அவை நடு இந்தியா, மராட்டியம், கர்நாடகம் இவற்றில் பரவலாகக் கிடைக்கின்றன. அவை முந்தைய திராவிட நாகரிகம் அல்லது சிந்துவெளி நாகரிகத்திற்கும் தொலைத் தொடர்பில்தாம் இருக்கின்றன. அவற்றை வடிவமைத்துக் கூற வேண்டுமானால் அவை (1) சிந்து நாகரிகத்திற்குப் பிற்பட்டவை. (2) சிற்றூர் நாகரிகமாகவும், நகரச் சாயல் பெறாத நாகரிகமாகவும் இருப்பவை. (3) சில கீறிய வடிவங்கள் தவிர்த்து வேறு எந்தப்பட எழுத்துகளையும் பெற்றிராதவை. (4) சில கீறிய வடிவங்கள் சிந்துவெளி வடிவங்களிலிருந்து மட்டும் தீர்க்கப்படுபவை. சிந்து முத்திரைகளே சிறிது காலத்திற்கு முன் (1978) மராட்டிய மாநிலத்தில் ஆமதாபாத் மாவட்டத்திலுள்ள பிரவாரா ஆற்றங்கரையில் தைமாபாத்தில் கிடைத்தன என்பது உண்மையே. இந்த இடம் சிந்துவெளி நாகரிகத்திற்கு உரிமையான இடமாகவே இருந்திருக்கலாம் என்பதற்கு அங்குள்ள செங்கற்களும் சான்று பகர்கின்றன. மதிப்பீடற்ற மாழை (உலோக) வடிவங்கள், உழவு செய்கையில் கிடைத்துள்ள குறிப்புகள் உள்ளன. இதிலிருந்து சிந்துவெளி நாகரிகம் பரவியும் இடம் பெயர்ந்தும் தெற்கேயும் வடக்கேயும், வடமேற்கேயும் சென்றுள்ளன என்று கூறலாம். இவை யெல்லாம் பேர்செர்விசின் கருதுகோளை முற்றிலும் தழுவியே உள்ளன. முந்தைய திராவிட நாகரிமான சிந்துவெளி நாகரிகம் தன் இடத்தினின்று வடிந்து படிப்படியாக நடு இந்தியா வழியாகத் தெற்கே தேங்கிச் சிறப்புறத் தொடங்கியது. அதே நேரத்தில் வடக்கே முந்தைய திராவிடர்களின் இருப்பிடம் ஆரியர்களுடையதானது. —தொடரும்

ஆர்வ மடல்.

மக்கள் புரட்சி!

அன்பின் அய்யா அவர்களுக்கு, வணக்கம்,

தாங்கள் மேலும் வாழ்ந்து தமிழகத்திற்காகப் பணியாற்றிட என் நெஞ்சார்ந்த வாழ்த்துகள். நீண்ட இடைவெளிக்குப் பின் தங்களுக்கு மடல் எழுதி நான் பெரு மகிழ் வடைகின்றேன். நான் தங்களுக்கு நீண்ட கால இடைவெளி விட்டு மடல் எழுதுவதாலும், இடைக் காலத்தில் நமக்கிடையே தொடர்பின்மை நிலவியதாலும், என்னை யாரென இனங்காணத் தங்களுக்குச் சிறிது காலம் நீடிக்கலாம். தங்களை நேரில் காணலாம் என்றிருந்தமையால் காலம் இன்று, நாளையென்றே கடந்து விட்டது. நான் தங்களுடன் அத்துணை அளவு நெருங்கிப் பழகியவன் அல்லன். ஏதோ ஒரு சில வேளைகளிலும், சில நிகழ்வுகளிலும் தங்களுடன் உரையாடும் வாய்ப்பைப் பெற்றுச் சில மடல்களின் மூலம் தங்களுடன் தொடர்பு கொண்டு இருந்தவன். இடையில் சில காலம் சில கரணியங்களால் நமக்கிடையே ஒரு பேரிடைவெளி ஏற்பட்டுள்ளது. அப் பேரிடைவெளிக்கு முற்றுப் புள்ளியிடவே இங்கே இம்மடல் தங்களுடன் தொடர்கிறது.

கருத்து, செயல், நடைமுறை:

எனது மடல் இங்கே எழுதப்படுவதன் நோக்கமே நாம் நமது கொள்கையாகக் கொண்டுள்ள **"தமிழக விடுதலை"** எனும் கருத்தாக்கத்தைச் செயல் வடிவில் கொணருவதற்கேயாகும். கருத்திற்கும் செயலிற்கும் இடையே வேறுபாடு உண்டு. **கருத்தென்பது அருவமானது; உருவமற்றது. செயல் என்பதோ வடிவமுடையது; வெளிப்படையானது.** எனவே ஒரு செயல் நிகழும் போது அதுவே நடைமுறையாகி விடுகிறது. இவற்றிற்கு இடையேயுள்ள உறவுகளை நாம் நன்கு உணர வேண்டும். நாம் கூறியவை யாவும் தொடர்பற்றிருப்பவை அல்ல; அவை தங்களுக்கிடையே வெளியில் புலப்படாத இணைப்புத் தொடரிகளால் இணைந்துள்ளவை. இவ்விணைப்புகளின் வழியாகவே முதலில் கருத்து நிலையில் இருப்பவை பின்பு செயல்களாகவும், செயலளவில் இருந்தவை பின்பு நடைமுறைகளாகவும், நடைமுறைகளே பின்பு இயல்பானவைகளாகவும் மாற்றம் பெறுகின்றன. எனவேதான் உருசியப் புரட்சித் தோழர் **இலெனின்.**

"புலனுணர்விலிருந்து அருவமான சிந்தனைக்கும், அருவமான சிந்தனையிலிருந்து நடைமுறைக்கும் செல்ல வேண்டும்" என்று கூறினார். இதன் உண்மையை நாம் நன்கு உய்த்துணர வேண்டும்.

கரணியம், வடிவம், கடமை:

எந்தவொரு செயலிற்கும் அடிப்படையாக ஏதோவொரு கரணியம் இருந்துள்ளது; இருந்து வருகின்றது. அக்கரணியத்தின் விளைவாகவே அச்செயல் தனக்குரிய வடிவத்தையும், கடமையையும் பெறுகிறது. அக் கரணியம் இல்லையேல் அச்செயலும் இல்லை. எடுத்துக்காட்டாக, பசி என்னும் உடலியல் கரணியம் இல்லையெனில் சோறு தின்றல் எனும் செயல் இல்லை. சோறு தின்ன வேண்டும் என்று எண்ணினேமெனில், நமக்குப் பசி எனும் உணர்வு தூண்டப்பட்டுள்ளது என் பது தானே பொருள். அதுவே அதன் உள்ளடக்கமும் ஆகும். இதில் பசி என்பது புலனுணர்வின் வெளிப்பாடு; சோறு தின்ன வேண்டும் என நினைப்பதோ அருவமான சிந்தனை; சோறு தின்னல் எனும் நிலை செயற்படுத்தும் நடைமுறையாகும். இதுவேதான் நமது வாழ்வின் அடிப்படையாகும். ***இந்த அடிப்படைச் செயல் உலகில் எந்த மாந்தருக்கும் மாறுவதில்லை. செயற்படுத்தும் முறைகளில் மாற்றங்கள் இருக்கலாம்.***

தமிழும், தமிழரும்:

வாழ்க்கை என்பது வாழ்விற்கும் இறப்பிற்கும் இடையிலான போராட்டமே ஆகும். வாழ்க்கை நடைபெற வேண்டுமெனில் நாம் இறப்பை உதிர்த்துப் போராடியே தீர வேண்டும். உலக மாந்தர் அனைவரின் போராட்டமும் ஒன்றுதான். வாழ்க்கைப் போராட்டம். இதன் உள்ளடக்கம் என்றும் மாறுவதில்லை. வடிவங்களும், தன்மைகளும்தாம் மாறுபட்டவை.

நாம் ஏன் நம்மைத் தமிழரென்று அழைத்துக் கொள்கிறேம். அதற்கான அடிப்படைக் காரணியம் உண்டு. நாம் தமிழைப் பேசுகிறேம்; அதன் மூலம் தமிழால் வாழ்கிறேம்; தமிழால் நம் வாழ்க்கைப் போராட்டத்தைச் செயற்படுத்துகிறேம். நான் பேசும் தமிழால்தான் என் தாயுடன் நானும், என்னுடன் என் தாயும் உரையாடிக் கொள்ள முடிகிறது. என் தம்பி, தங்கைகளுடன், எனது மக்களுடன் கொஞ்சி மகிழ முடிகிறது. எனது வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு மற்றும் உடைகளைக் கேட்டுப் பெறமுடிகிறது. எனவே ***நமது வாழ்வின் அடிப்படையே தமிழாக இருப்பதால்தான் நாம் நம்மைத் தமிழரெனப் பெருமையுடன் அழைத்துக் கொள்கிறேம்.***

போராட்டமும் புரட்சியும்:

தமிழ் நமக்கு எதனால் உரிமையுடையதாக உள்ளது. நமது முன்னேர்களின் இடையருத உழைப்பினுல், விளைந்த பலன் அது. நமது முன்னேர்கள் நமக்கு விட்டுச் சென்ற விலை மதிப்பில்லா உடைமை அது. அதனைப் பெறுவதற்காக நமது முன்னேர்கள் எத்தனை ஆண்டுக் காலம் இயற்கை

யோடு போராடினார்கள். ஆக அவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தினுடைய ஒரு பகுதியாகவே மொழியைப் பெறும் போராட்டமும் இருந்து வந்துள்ளது. அவர்கள் தங்கள் போராட்டத்தைத் தம் மரபுரிமைக்கு விட்டுச் சென்றனர். அதனால்தான் அவர்களின் வழியினரான நமக்குத் தமிழ் உரிமையுடையதாக உள்ளது. அதனால்தான் அ'து அழிக்கப்படும் நேரங்களில் எல்லாம் நாம் அதைக் காக்கப் போராடுகிறோம். ஏனெனில் **வாழ்வின் பலன்கள், அழிக்கப்படும் இடங்களில் எல்லாம் போராட்டங்கள் வெடிப்பது உண்டு. அவை புரட்சிகளாக மாறுவதும் உண்டு.** இங்கு வாழ்வின் பலன்கள் எனும் தன்மையில், உழைப்பின் விளைவுகள் எனும் உள்ளடக்கம் அடங்கியுள்ளது. இதனால்தான் பொதுவுடைமைத் தலைவர்களில் ஒருவரான எங்கெல்சு, "உழைப்பே மாந்தனை உருவாக்கியது என்றும், அவ்வுழைப்பின் பலனாலேயே மாந்தன் தன்னை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்திக் கொண்டான் என்றும் கூறுகிறார். உழைப்பு என்பது அடிப்படையானது. அவ்வுழைப்பின் தன்மைகளும், வடிவங்களும்தாம் வேறுபட்டவை வடிவங்கள் வேறுபட்டுத் தனிமைப்படும் போதுதான் போராட்டங்கள் வேகம் பெறுகின்றன. அதனால்தான் உழைப்பைச் சுரண்டும், அழிக்கும் அமைப்புகள் மேலோங்கும் போதெல்லாம், அவ் வுழைப்பை மீட்டுத் தம் வாழ்வைக் காத்துக் கொள்ளப் போராட்டங்கள் வெடிக்கின்றன. போராட்டம் ஒன்று தான்; அதுதான் வாழ்க்கைப் போராட்டம். அது என்றும் மாறாதது. அதன் தன்மைகளும் வடிவங்களும் தாம் மாறுபட்டவை. வகுப்புப் போராட்டமும் இதனுள் அடங்கியதுதான்.

சுரண்டல் தன்மை:

முதலாளிய வகுப்பு பாட்டாளிய வகுப்புக்கெதிராகத் தனது வாழ்க்கைப் போராட்டத்தைத் தொடுக்கிறது. இது சுரண்டல் எனும் தன்மையில் நடைபெறுகிறது. தன் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள அம் முதலாளிய வகுப்பு அப்பாட்டாளிய வகுப்பை ஒடுக்குகிறது. இ'து ஒடுக்கல் எனும் தன்மையில் நடைபெறுகிறது. தம வாழ்வை என்றும் நிலையானதாக நிறுத்திக் கொள்ள அம்-முதலாளிய வகுப்பு மேலும் அப்பாட்டாளிய வகுப்பைத் தன் ஆளுமைக்குள் அடக்கியாள்கிறது. இ'து ஆளுமை எனும் தன்மையில் நடைபெறுகிறது. இவற்றால் கிளர்ந்தெழுந்து போராட அணியமாகிறது அப்பாட்டாளிய வகுப்பு. எதற்காக? தம் உழைப்பை, உழைப்பின் பலனைச் சுரண்டல்களிலிருந்து காத்துக் கொள்வதற்காக; அம் முதலாளிய வகுப்பை எதிர்த்துப் போராடுவது எதற்காக? தன் மீது சுமத்தப்படும் நசுக்கல்களை, ஒடுக்கல்களைத் துடைத்து எறிவதற்காக; போராடி முதலாளிய வகுப்பின் ஆளுமையைத் தூக்கியெறிவதும் எதற்காக? தம்மைத் தாமே ஆளுமை செய்து கொண்டு தம் உழைப்பின் பலனைத் தானே துய்ப்பதற்காகவே. இவையாவும் எத்தன்மையில் அடங்கியுள்ளன? இவை விடுதலை என்னும் தன்மையில் அடங்கியுள்ளன. ஆக ஆளுமை என்பதும் விடுதலை என்பதும் வாழ்க்கைப் போராட்டத்தின் இரு வகுப்பு நிலைப் போராட்டங்களாகும்.

பாட்டாளியமும் முதலாளியமும்.

முதலாளியத்தின் வாழ்க்கைப் போராட்டம், பாட்டாளியத்தின் வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து வேறுபட்டது. ஏனெனில் அது தனிமைச் சிந்தனையுடையது. ஆளுமைப் பண்புடையது; ஒடுக்கும் தன்மையுடையது. அதனால்தான் அது தனியுடைமைக் கொள்கையாக வெளிப்படுகிறது. ஆனால் பாட்டாளியத்தின் வாழ்க்கைப் போராட்டமோ மாந்த நேயச் சிந்தனையுடையது; பொதுமைப் பண்புடையது; தோழமைத் தன்மையுடையது. அதனால்தான் அது வெளிப்படும் இடங்களில் எல்லாம் பொதுவுடைமைக் கொள்கையாக வெளிப்பட்டுப் புரட்சியாக வெற்றி பெறுகிறது பாட்டாளிய வாழ்க்கைப் போராட்டம், முதலாளியப் போராட்டத்தைப் போல் மாந்தர்களை ஆங்கிலேயர், அமெரிக்கர், கறுப்பர், வெள்ளையர், தமிழர், பார்ப்பனர், பறையர் என்றெல்லாம் வேறுபடுத்தித் தனிமைப்படுத்திப் பார்க்காமல் மாந்தர்களாக மதிக்கும் மாந்த நேயம் கொண்டது. இதனால்தான் பாட்டாளிய வகுப்பின் வாழ்க்கைப் போராட்டம் தன்னை அறிவியலால் செழுமைப் படுத்திக் கொண்ட போது. "உலகத் தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள்" என்றும், "ஒடுக்கப்பட்ட இன மக்களே ஒன்று சேருங்கள்" என்றும், தனது போர்க் கொடியை முதலாளிய வகுப்பிற்கெதிராக உயர்த்தியது. அதைக் கண்டு உலக முதலாளியமே அரண்டு போய் நிற்கிறது.

தமிழ்நாடு தமிழருக்கே!

நமது போராட்டமும் மேற்கூறிய வகையில்-தான் எழுந்தது. அ'து ஒரு தொடர்ச்சியானது. இன்று நாம் காண்பது அத் தொடர்ச்சியின் வளர்ச்சியையே. தமிழகத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களாலும், சில நிகழ்வுகளாலும் தமிழ் ஆட்சிக் கட்டிலிலிருந்து அதை வடக்கிலிருந்து வந்தேறிய ஆரியம் அழிக்க முற்பட்டது. எனவே தமிழை அழிக்கும் ஆரியத்திடமிருந்து காக்க நமது போராட்டத்தின் தொடர்ச்சியானது மறைமலையடிகளிடம் தனித்தமிழ் இயக்கமாக மலர்ச்சியுற்றது. ஆனால் இது காக்கும் முயற்சியாக இருந்தது. பெரியாரிடமோ ஆரிய ஒடுக்கல்களிலிருந்து மாந்தர்களை விடுவிக்க வழி தேடும் தன்மான இயக்கமாகக் கிளர்ந்தெழுந்தது. **முன்னது காப்பதைக் கடமையாகவும், பின்னது மீட்பதைக் கடமையாக**

வும் கொண்டு செயல்பட்டன. இருப்பினும் இரண்டின் உள்ளடக்கமும் ஒன்றுதான். அதுதான் ஆரிய எதிர்ப்பு என்பதாகும். தனித்தமிழ் இயக்கம் மொழித் தூய்மையை முன்வைத்தது. தன்மான இயக்கமோ சாதியத்தின் இழிவுகளையும், வேற்றுமை உணர்வுகளையும் தகர்த்தெறிந்து பொதுமை காணவேண்டிப் பொதுமைப் போராட்டத்தை முன்னெடுத்தது. இறுதியில் இரண்டுமே ஒரே கருத்தையே வலியுறுத்தின. அ'து தான் தமிழினத்தின் விடுதலை என்பது. அதற்கு அவர்கள் கொடுத்த வடிவம்தான் ''தமிழ்நாடு தமிழருக்கே.'' இது தமிழரின், தமிழர்களாய் வாழ்கின்ற மாந்தர்களின் வாழ்க்கைப் போராட்ட வளர்ச்சி நிலை **முதலாளிய வளர்ச்சிச் சூழல்களில்தாம் தேசிய இயக்கங்கள் வெடித்தெழும் என்பார் காரல் மார்க்சு.** ஆனால் தமிழகத்தில் அத்தகைய முதலாளிய வளர்ச்சிகள் இல்லாத நிலையில் எவ்வாறு ''தமிழ்நாடு தமிழருக்கே'' எனும் முழக்கம் வெளிப்பட்டது. **அது வந்தேறிய முதலாளியம் ஏற்படுத்தி விட்ட விளைவுகளால் எழுந்தது.** அவ்வந்தேறிய முதலாளியமும் நம்மை ஆண்டு விட்டுச் சென்று விட்டது. ஆனாலும் நம் அடிமைத்தளை அறுபடவில்லை. தமிழர்களின்- வாழ்க்கை நிலை உயரவுமில்லை. தமிழர்களின் வாழ்க்கை இன்னும் ஆரிய இனவெறியின் கையில் கிடைத்த பூமாலையாகத் தான் இருந்து சீரழிகிறது. இந்நிலையில் தமிழர்களின் வாழ்க்கைப் போராட்டத்தை ஓர் ஒருங்கிணைந்த போராட்டமாக மாற்றக் கூடிய சிந்தனை வெளிப்பட்டது. அது பாவேந்தன் எனும் உருவமாக, தமிழ்ப் பிழம்பாக, தமிழகத்தில் உலா வந்தது. அவர்தாம் தமிழக மாந்தர்களின் வாழ்க்கைப் போராட்டத்தை ஒரு பாட்டாளிய வகுப்புப் போராட்டமாகப் பார்த்தார். தமிழக விடுதலைக்குரிய அனைத்து இலக்குகளையும் இணைத்தார். அதனால்தான்

''புதியதோர் உலகம் செய்வோம் — கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்''
[என்றும்,
'பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும்
[சேர்ப்போம்.
புனிதமோடு அதை எங்கள் உயிரென்று
[காப்போம்''

என்றும் முழக்கித் தமிழகத்தை ஒரு பொதுவுடைமைப் பூங்காவாகப் பார்க்கக் கருதி,

ஓர் தமிழ்நாட்டில் உருசிய நாட்டையும்
உண்டாக்கித் தீர்த்திடலாம்.
ஆர் செயும் பூச்சாண்டி இங்கு பலித்திடும்
அடிமையும் தீர்ந்திடலாம். — என்றும் பாடி

னார். அவரும் போய் விட்டார். நமது போராட்டம் இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. போராட்டம் எப்போது புரட்சியாக மாறும்? அ'து ஒரு தீவிரப் பாய்ச்சல் நிலையை அடையும் போதுதான் புரட்சியாக மாறும். நாமும் நமது போராட்டத்தை அடிமை வாழ்க்கைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் வருகின்றோம். ஏனெனில் நமது முன்னோர்கள் நடத்திய போராட்டத்தின் தொடர்ச்சிதானே இன்றைய போராட்டம். அதற்காகத்தானே நாம் பலமுறை தமிழக விடுதலை மாநாடுகள் நடத்தினோம். அவற்றால் நமது போராட்டம் எழுச்சியுற்றுப் புரட்சியாக மாறியதா? இல்லை. வீர முழுக்கங்கள் எல்லாம் வெற்று முழக்கங்கள் ஆகி வீழ்ந்து விட்டன. இதற்கான கரணியம்தான் என்ன? தெளிந்த பார்வை இருந்தும் தெளிவற்ற முறையில் போராடி வருவது ஒரு கரணியம். பல முகாம்களாகப் பிரிந்து போராடி வருவதும் ஒரு கரணியம். **இவையல்லாது நாம் செய்து வருகின்ற தவறுகளும் முதன்மைக் கரணியம்.** இந்தப் போக்குகள், இந்தத் தவறுகள் எங்கிருந்து முளைத்தன? எவ்வாறு வளர்ந்தன என்பதையெல்லாம் ஆய்ந்து நம் தவறுகளை நாமே ஏற்றுத்திருத்திக் கொண்டு செயற்படாவிடில் நமது போராட்டம் எழுச்சியும் அடையாது; புரட்சியாகவும் மாறாது.

புரட்சியாக மாறவேண்டும்!

ஒவ்வொரு போராட்டத்திற்கும் உள்ளடக்கமும், கடமைகளும் உண்டு. அவற்றில் தெளிவடைந்தால் மட்டுமே போராட்டத்தை ஒரு பாய்ச்சல் நிலைக்குக் கொணர்ந்து புரட்சியாக மாற்ற முடியும். கால நிலைகளுக்கேற்ப உள்ளடக்கங்களில் மாறுபாடு இல்லையெனினும் கடமைகளில் மாறுபாடு ஏற்படும். அது தவிர்க்கவியலாதது. அதை ஏற்காமல் விடாப்பிடியாக ஒரே கடமையில் நின்று போராட்டத்தை நடத்திச் செல்வது போராட்டத்தைப் பின்னுக்குத் தள்ளிவிடும்; போராட்டத்தின் உள்ளடக்கத்தையே சிதைத்துவிடும். நமது தமிழக விடுதலைப் போராட்டமும் அப்படியே. காலநிலைகள் மாறிக் கொண்டே செல்கின்றன. உள்ளடக்கம் மாறுவதில்லை. **கடமைகளில் மாறுபாடுகள் ஏற்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.** இதை நாம் உணர்ந்து செயல்படவில்லையெனில் நமது போராட்டத்தை நாம் சிதைத்தவர்கள் ஆவோம். போராட்டத்தின் சுமையை எதிர்காலத் தலைமுறையினரின் தலைமையில் சுமத்தியவர்கள் ஆகிவிடுவோம். போராட்டங்கள் நடப்பதே வளமான வாழ்வு காண வேண்டியே ஆகும். நாம் இன்று போராடினால்தான் நாளை நமது மக்கள், நமது எதிர்காலத் தலைமுறையினர் வளமாக வாழ்வார்கள். **எனவே நாம் நமது விடுதலைப் போராட்டத்தைத் தெளிவாக முன்னெடுக்க, செயல்வடிவில் கொணர வேண்டிய முடிவிலுள்ளோம். இது குறித்து நாம் ஒரு தீவிர முடிவிற்கு வரவேண்டும்.**

இனவெறியும் பணவெறியும்.

தமிழர்களின் இன்றைய நிலை என்ன? இனவெறியின் கையிலும், பணவெறியின் கையிலும்

ஈழப் போராட்டத்தில் எத்தனைத் தவறுகள்?

மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார்.

தனியீழத் தமிழரின் இலங்கைப்போராட்டம் அரசியலன்று; இனவியலாகும்; இனக்காப்பாகும். ஆதலின் எங்கு வாழ் தமிழனும் இனவுணர்வோடு சிந்திக்கக் கடமைப்பட்டவன். இப் போராட்டத்தில் பலதவறுகள் நிகழ்ந்தன; மேலும் நிகழ்ந்து கொண்டே வருகின்றன.

1. தனிஈழப் போராட்டம் இலங்கையின் உள்நாட்டுச் சிக்கல் எனவும், தொடர்புடைய அந் நாட்டுத் தலைவர்களே கூடிக் கலந்து முடிவு கொள்ளவேண்டும் எனவும் பறையறைந்து வந்த இந்தியவரசு, 29-7-87 தானே உடன்படிக்கையில் கையெழுத்திட்டது இந்தியவரசியலில் பெருங்கொள்கைத் தவறாகும்.

2. என்தாய் மலடி என்பதுபோல, **இந்திய அமைதிப்படை** என்று ஒரு நற்பெயர் வைத்துக் கொண்டு யாருக்காக இப்படை சென்றதோ அவர்களையே பொருது அழிப்பது காந்தியத்தைப் புதைப்பதாகும்.

3. இலங்கைச் சிங்களவரசும் இந்தியவரசும் செய்துகொண்ட ஒப்பந்தத்தை, விடுதலைக்காகப் பல்லாயிரம் உயிர்ப் பலி கொடுத்த ஈழத்தலைவர்கள் முழுதும் ஏற்று நிறைவேற்ற வேண்டும் என்று இந்தியா கேட்பது, உலகவரங்கில் வேறு வகையாகப் பெறமுடியாத வெற்றியை இச்சிறிய இடத்திலாவது பெறலாம் என்ற வரலாற்றாசையேயாகும்.

4. தனி ஈழவிடுதலையை ஆதரித்தால், இந்தியாவிலும் பல பிரிவினைக் கிளர்ச்சிகள் ஏற்படும் என்று கருதிய இந்தியவரசின் அச்சமே ஈழத்தமிழரைச் சிங்களவரசுக்குக் காட்டிக் கொடுப்பதாயிற்று.

5. இந்தியவரசு இலங்கை அதிபர் செயவர்த்தனவை நம்பி நம்பிப் பெரிதும் ஏமாறிய சோணகிரியாயிற்று. ஈழமறவர்களை அழித்துப் படைக்கலங்களை இந்தியப்படை கைப்பற்றி இலங்கையரசிடம் ஒப்படைத்தபின் இந்தியப் படைகளே நாடு திரும்புக என்று ஆணையிடுவார் அதிபர். உடன்படிக்கை முழுவதும் இலங்கைப் பாராளுமன்றத்தில் சுருக்கமும் நிறைவேறாது; மாநிலக் குழுக்களும் அமையா. ஈழ மறவரையும் மக்களையும் ஈழநாட்டையும் அழித்தபின் இந்தியப்படை வெற்றியாக இந்தியா வந்து சேரும். இதுவே நோபல்பரிசு(!) பெற விழையும் உடன்படிக்கையின் இழி சிறப்பு.

6. கோழை இந்தியாவை ஈழத்தார் நம்பியது பெருந்தவறு: இத்துணைத் தமிழ் இளைய மறவர்களை இந்தியப்படை கொல்வதைப் பார்த்து நடுவணரசுக்கு ஒத்துழையாமையியக்கமாக நம் தமிழகவரசு நடத்தியிருக்கவேண்டும். அது செய்யாதது ஐந்து கோடித் தமிழர்களின் இனத்தவறு. இலங்கைத் தலைவர் உடன்படிக்கையை நிறைவேற்றுவார்

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

சிக்கியுள்ள பூமாலை. வாழ்க்கையோ வழியறியாப் பாதை. செயல்களோ தெளிவற்ற செயல்கள்.

இளைஞர்களோ வீதியில் —
மயக்கங்களின் மருட்சியினால்.
மாணவர்களோ வீதியில் —
வேலையில்லாத திண்டாட்டத்தில்.
பெண்களோ அடுப்படியில் —
புகைந்தெழும் புகையோடு.
மழலைகளோ மடியில் —
வல்லரசுகளின் நோய்களோடு
மக்களோ அடிமைகள் —
ஆட்சியாளர்கள் அரட்டலால்.
தமிழ் எங்கே — இந்தியின் காலடியில்.
தமிழகம் எங்கே — இந்தியாவின் கொடும்பிடியில்.

இவற்றிற்கெல்லாம் விடிவு என்ன? தமிழக விடுதலை முழக்கத்தை விரைந்து முன்னெடுப்பது தான் ஆகும். இதற்காக அண்மைக் காலத்தில் ஒரு கூட்டணி ஏற்பட்டது ஆனால் செயல்பட வில்லை. காரணியம் என்ன?

போராட்டம் புரட்சியாக மாற பாய்ச்சல் நிலை தேவை. **அப்புரட்சியைச் செயற்படுத்த மக்கள்** தேவை. மக்கள்தாம் போராட்டத்தை நடத்துபவர்கள்; மக்கள்தாம் போராட்டத்தில் வெற்றி பெறுபவர்கள். அதில் **நாம் பங்குகொள்ள அணியமாக வேண்டும்.** அதனால்தான் சீனப் புரட்சித் தோழர் மாவோ,

"மக்களுக்குள் செல்லுங்கள்; மக்களைத் திறனறியுங்கள்;
மக்களின் மனத்தோடு போராட்டத்தை இணைத்து வெல்லுங்கள்" என்று முழங்கினார்.

நாம்யார்? மக்கள் போராளிகள்; தலைவர்களல்லர். வழிகாட்டிகள்.

புரட்சி யாருடையது? மக்களுடையது; நம்முடையதன்று.

வழி நடத்துவது யார்? நாமா? இல்லை; மக்களின் மனங்கள். மக்களுக்குள் செல்வோம்; மக்களை ஆய்ந்தெடுப்போம்; மக்கள் வாழ்வை மீட்க மக்கள் போராளிகளாவோம் என்று கூறி விடைபெற்றுக் கொள்கிறேன். தமிழ் வாழ்க! தமிழக மக்கள் புரட்சி வெல்க! —செ. அமிழ்தன், சென்னை.

Scanned with CamScanner

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று இன்னும் இந்தியவரசு மனப்பால் குடிப்பது பெரிய பேதைமையாகும்.

7. ஈழத்தமிழர்களும் பல தவறுகள் செய்கின்றனர். பல்லாயிரம் ஈழத்தமிழர்களைச் சிங்களவரசு உயிர்ச் சூறையாடிது கண்டு இவர்கள் ஒன்றுபடாது ஐந்து ஆறு சிறிய கட்சிகளாகப் பிரிந்து தம்முள் போரிட்டுக் கொன்று கொள்வது எல்லாவற்றுக்கும் அடிப்படைத் தவறாகும்.

8. ஈழத்தமிழ்த் தலைவர்கட்கு விட்டுக்கொடுத்துப் பின் தலையேறும் அரசியற் சூழ்ச்சி போதாது.

தன்துணை இன்றால் பகையிரண்டால் [தானொருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று (875)

என்ற திருக்குறட்படி, உடன்படிக்கையை ஏற்பதுபோல் ஏற்று, இந்தியப் படையைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டு, மாநிலவாட்சி அமைந்த பின், உள்வலுப்பெற்றுக் கிளர்ச்சி தொடங்கியிருக்க வேண்டும். பெருமறவர்களாதலின், அரசியற்சூழ்ச்சி அவர்கட்குத் தோன்றவில்லை. 'காலம்பார்த்து உள்வேர்க்கும்' தந்திரம் தெரியவில்லை.

9. இன்றும் உய்திக்கு ஒரு வழியுண்டு. தமிழினமும் தமிழகவரசும் இந்தியாவுக்குக் காந்தியம்படி ஒத்துழைக்க மறுத்தால் இந்தியவரசு உண்மையுணரும்: இலங்கைத் தலைவருக்கு ஏமாற்று. இதற்கு ஒரு நற்சூழ்ச்சி வேண்டும். இந்தியப் பழியை வரலாற்றில் சுவடுபடாது துடைத்தாக வேண்டும். பின்வருமாறு இந்தியவரசு செய்தால், செய்யும்படி தமிழகவரசு வற்புறுத்தினால் மிகவும் நல்லது.

அ) இலங்கை சென்ற இந்தியப்படை திரும்பக் கூடாது.

ஆ) இலங்கைத் தலைவர் உடன்படிக்கைப்படி நடக்கவில்லையென்று, இந்தியப்படை அங்கே நிலைப்படையாக வேண்டும். உள்ளே புகுந்த பிடியை விடக்கூடாது.

இ) ஈழத்தை இந்தியப்படையின் துணையோடு தனி நாடாக அறிவிக்கவேண்டும்.

அல்லது

ஈழத்தை இந்தியாவின் ஒரு மாநிலமாக அறிவித்து ஆட்சி செய்யவேண்டும்.

தமிழ்வழிக் கல்வி.

தமிழ் ஒன்றே பயிற்று மொழி. மழலைப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை எல்லாத் துறைகளிலும் தமிழுக்கே முதலிடம். தமிழுக்கு அடுத்து எவ்வளவு பிற மொழிகளையும் விருப்பம்போல் துணை மொழிகளாகக்கற்கலாம். தமிழில் சிறுமழலைப் பெருமழலைப் பள்ளிகளை ஊர்தோறும் அரசே தொடங்க வேண்டும். —வ. சுப. மாணிக்கம்.

ஆங்கிலத் தமிழன்!

அண்மையில், முகவையில், இந்தியப் படை முன்னாள் வீரர் அதிகாரி, 'இலங்கைக்கு உந்து ஓட்டுநர் வேலைக்கு' ஆள் எடுத்துக் கொண்டிருந்தார். நேர்முகத் தேர்வுக்கு முன்னாள் படைவீரர்களே வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் மட்டும் ஆங்கிலஇந்தியர் (Anglo - Indian) ஆவார். அவரிடம் மாதம் ஊதியம் 900/- அயல் நாட்டுச் செலவாணியாக உருபா 450/- மேலும் பல சலுகை பற்றி அதிகாரி விளக்கிச் சொன்னார். வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டும் உள்ள தமிழ் நாட்டில் கூலி அடிமைக்கு ஆள் பஞ்சமிருக்குமா என்ன?

ஆனால், அந்த ஆங்கிலம் மட்டுமே பேசத் தெரிந்த முன்னாள் படைவீரர் தமிழ் நாட்டில் மூன்றுண்டுகளாக வாழ்ந்து வருபவர். எனவே, தமிழ் விளங்கும். ஆனால் பேசும் பயிற்சி இல்லை! அவர், ஆளெடுக்கும் அந்த அதிகாரியிடம், "நான் வேலைக்குப் போக விரும்புகிறேன்., ஆனால், என்னை என் உடன்பிறந்தவர் கொன்று விடுவார்களே" என்றார். "ஏன் அஞ்சுகிறாய், விடுதலைப் புலிகள் இப்போது வலுவிழந்து போயிருக்கின்றனர்", என்று அதிகாரி கூறியிருக்கிறார்!

அதற்கு அந்த "ஆங்கில இந்தியர்" 'அ'து இல்லை ஐயா. நான் அங்கே போனவுடன் விடுதலைப் புலிகளின் பக்கம் சேர்ந்து விடுவேன், அவர்களை வலிமைப்படுத்த; அமைதிகாக்கப் போன இந்திய வீரர்கள் என்னைச் சுட்டு விடுவார்களே. அதனால் தான் என் உடன்பிறந்தவர்களால் நான் கொல்லப் படுவேன், என்று, கூறினேன்' என்றார். உடனே, அதிகாரி பதறிப் போனார். 'அப்பா, நீ, உடனே வெளியேறு. உன்னால் எனக்கும் கேடுவரும்' என்று கூறி நாற்காலியை விட்டெழுந்து அவரை வெளியேற்றிய பின்னரே அமர்ந்தார்!

ஓர் ஆங்கிலருக்குள்ள தமிழின நயன்மை, உணர்வு தமிழர்க்கில்லையே! அவர் 'ஆங்கில - இந்தியன்' ஆகார். அவர் ஓர் "**ஆங்கிலத்-தமிழர்**" என்றே கூறலாம். ஏன், அவரைத் 'தமிழர்' என்றும் தகும்! —பறம்பை அறிவன்.

சிதம்பரத்தின் பேரறிவு.

'யாழ்ப்பாணம் தமிழர்களில் ஒரு பிரிவினர்க்குத்தான் பிரபாகரன் தலைவர். யாழ்ப்பாணம் மக்கள் அனைவரிடமும் அவரது பேச்சு எடுபடாது'
—ப. சிதம்பரம். திருச்சிக் கூட்டத்தில் (நவ 29)

இந்தியாவின் ஒரு பிரிவினருக்குத்தான் இராசீவ் தலைவர். இந்திய மக்கள் அனைவரிடமும் அவரது பேச்சு எடுபடாது. இனி, கடவுள் கூட ஒரு பகுதி மக்களுக்குத்தான் தலைவர். ஒவ்வொரு பகுதி மக்களுக்கும் வெவ்வேறு கடவுளர்தாமே உள்ளார். இதில் என்ன வியப்பு. அப்படித்தானே இருக்க முடியும்.

Scanned with CamScanner

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பலாலி வானூர்தி நிலையத்தில், இந்தியப் படைத் தளபதியிடம் சென்னையிலிருந்து சென்ற செய்தியாளர்கள், "இந்தியப் படை வீரர்கள் யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்களைக் கற்பழிப்பதாகக் கூறப்படுகிறதே, அ்து உண்மையா?" என்று கேட்டனர். அதற்கு அவர், "இந்தியப் படை வீரர்கள் தேவதைகளும் அல்லர் பேய்களும் அல்லர்" ஆனாலும் அவர்களைப் பற்றிக் கூறும் இக் குற்றச் சாட்டு பொய்" என்று விடை கொடுத்தார்.

இவ்விடையில், 'அவர்கள் அவ்வாறு செய்திருக்கலாம்' என்பதை முதலில் மறைமுகமாக ஒப்புக் கொண்ட அவர், பின் வரியில் அக்குற்றச் சாட்டை மறுத்திருக்கிறார்.

ஆனால் கடந்த 12-10-87-முதல் 17-10-87-ஆம் நாள் வரை உள்ள ஆறு நாள்களில் மட்டும் இந்தப் படையினரால் கற்பழிக்கப் பெற்ற பெண்கள் பற்றிய விளக்கங்கள் இதோ!

12-10-87-இல் யாழ் மருத்துவமனையில் குண்டுக் காயங்களால் மருத்துவம் பார்த்து வந்த நேர்யாளிப் பெண்களில் பலரையும் கொடூரமான முறையில் கற்பழித்த பின்னர் கொலை செய்தனர். அன்றே கதுமலை, உரும்பிராய், கொக்குவில் ஆகிய பகுதிகளில் ஏராளமான பெண்கள் (எண்ணிக்கை தெரியவில்லை) இந்தியப் படையினரால் கற்பழிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். கற்பழிக்கப் பட்ட பெண்களில் உயிர்தப்பிய 13 பெண்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

13-10-87-அன்று யாழ்ப்பாணத்தில் தேடுதல் வேட்டை என்ற பெயரில் வீடு வீடாகச் சென்று அமைதிப் படையினர் குழந்தை, சிறுவர், முதியோர், பெண்கள் என்று பாராமல் 60 ஒன்றுமறியாப் பொதுமக்களைக் கொன்று குவித்தனர். வீடுகள், வீதிகள் எனக் காணும் இடமெங்கும் பிணங்களே தென்பட்டன. வீதிகளில் கிடந்த பிணங்கள் பெரும்பாலும் எல்லாமே படைத்துறை வண்டிகளால் நசுக்கப்பட்டுச் சிதைவுற்றுக் காணப் பட்டன.

14-10-87-இல் உடுவிலில் 15 பெண்கள் இந்தியப் படைகளால் கற்பழிக்கப் பட்டுக் கொல்லப் பட்டனர். கற்பழிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட பெண்களின் உணர்வு உறுப்புகள் கடித்துக் குதறப் பட்டிருந்தாகவும், உடல் முழுவதும் அரத்தக் காயங்கள் இருந்ததாகவும், பின்னர் இவர்களின் உடல்கள் இரும்புத் தொடரி பொருத்திய கவச ஊர்திகளின் கீழ் போடப்பட்டு நசுக்கப் பட்டதனால், சப்பாத்தி போலச் சப்பட்டையாய்ச் சிதைந்து விட்டதாகவும், இவற்றை நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

15-10-87- அன்று யாழ்ப்பகுதியில் கண்மூடித்தனமாகக் குண்டுகள், ஆட்லரி செல்கள் வீசப்பட்டன. ஏராளமான பொது மக்கள் கொல்லப்பட்டனர். நிறையப் பேர் படுகாயமுற்றனர். ஏராளமான பெண்கள் கற்பழிக்கப் பட்டனர். இவர்களுள் 11 பெண்களின் சடலங்கள் ஓர் அறையில் காணப்பட்டன. உடைகள் இல்லாத நிலையில் அந்தப் பெண்களின் உணர்வு உறுப்புகள் வெட்டப் பட்ட நிலையிலும், மாந்தப் பல் அடையாளங்கள் காணப்பட்ட நிலையிலும் இருந்தன. (இவர்களுள் சிலர் திருமணம் ஆன பெண்கள்). இவர்கள் அல்லாமல் 40 பெண்கள் இந்தியப் படையினரின் தாவடி(முகாம்)களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் தொடர்ந்து கற்பழிக்கப்பட்டுப் பின் இரும்புக் கவச ஊர்தியால் அடையாளம் தெரியாத வாறு நெரித்துக் கொல்லப்பட்டனர்.

— அன்றே மட்டகளப்பு மாவட்டத்தில் உள்ள மயிலம் வெளியில் உள்ள தமிழர் வீடுகள் 300-ஐ எரிந்தனர். அங்குள்ள சர்வோதய அலுவலகத்தில் இருந்த 25 பெண்கள் கற்பழித்துக் கொல்லப் பட்டனர். (தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறியுள்ளார். அவ்வமெரிக்கக் குழுமங்களின் பெயர்களைப் பார்த்தாலே நமக்கு இவர்மேல் பெருத்த பெருத்த (அச்சுப் பிழையில்லை) நம்பிக்கையெல்லாம் வருகிறது. 'டார் ஆலிவர், டு பாண்ட்' —நிறுவனங்கள் அவை. அத்துடன், டு பாண்ட் நிறுவனத்தைச் சேர்ந்த பி. பாய்வாலா, பிலிப் பார்ட்சுலே, எப். ஏ. சலம், எம். ஏ. சாத், டார் — ஆலிவர் நிறுவனத்தின் இயக்குநர் கே. பி. மோகன்தாசுராவ், மண்டல மேலாளர் ஏ. சங்கர், மேலாளர் ஆர். நடராசன் — ஆகியோரை வைத்துக் கொண்டு இச் செய்தியைச் சொல்லியுள்ளார். இச்செய்தி உண்மையிலேயே, உண்மையிலேயே (அச்சுப்பிழையில்லை)உண்மையாக மிக மிக உண்மையாக இருக்குமென்று மிக மிக நம்புவோமாக!

அந் நம்பிக்கைக்கு என்ன அடிப்படை யென்றால், இவர்கள் போட்ட 83-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஏறத்தாழ 500 கோடி உருபா திட்டமான (அதற்கும் இப்படித்தான் 200 கோடி என்று முதலில் தெரிவிக்கப்பட்டது; பின் 500 கோடி ஆனது.) கிருட்டிணா ஆற்று நீரின் —தெலுங்கு கங்கைத் திட்டத்தால் — சென்னை நகரில் — உள்ள எல்லாக் குழாய்களிலும் தண்ணீர் வழிந்து தெருவெல்லாம் ஓடிக் கொண்டிருக்கிறதே! தெரியவில்லையா?

வாழ்க வாழ்க, எம். சி. ஆர்; சேப்பியார், பண்ணுரொட்டியார், வீரப்பனார், சாமி நாதனார் — முதலிய — முதலிய — வள்ளல் பெருமக்கள்! தந்நலம் கருதாத தகைசால் மாண்புகள்!

—தகரிவெடி

Scanned with CamScanner

அழிப்பாரோ?

பாவலர் -- தரங்கை பன்னீர்ச்செல்வன்.

ஓடிப் பரவி உயிருண் கொழித்த
ஓற்றைக் காவிரி காய்கிறது — மெய்யை
மூடிப் புதைக்க முயலுங் கயமை
மூகாம் பிகைப்புகழ் ஆய்கிறது!

கூடிக் கிளர்ந்த கொள்கைப் புலியினம்
கொடியர் பிடியில் மடிகிறது — இதனை
வேடிக் கையெனும் விளக்கு மாற்றில்
வெள்ளிக் குஞ்சம் படிகிறது!

பீடித் திருந்த பித்தைப் போக்கிய
பெரியார் கோட்டை உடைகிறது —
[திமிரால்
ஆடித் திரிந்த அரைவேக் காடே
அமைச்சர் பதவி அடைகிறது!

தேடிப் பயின்று தெளிந்த புலமை
தெருவின் நாயாய்த் திரிகிறது —
[அரசைப்
பாடிப் புகழும் பச்சைப் பொய்ம்மை
பரிசை அள்ளிச் சொரிகிறது!

கோடிக் கணக்கில் கொள்ளை யடிக்கும்
கூட்டம் நாட்டை ஆள்கிறது — மக்கள்
வாடிக் கருகும் வரலா றின்று
வறுமைக் கோடாய் நீள்கிறது!

மானம் விற்கும் மடமைத் தமிழர்
மயக்கம் தெளிந்து விழிப்பாரோ? புரட்சிச்
சீன உருசியக் சீற்றங் கொண்டு
செந்தமிழ்ப் பகையை அழிப்பாரோ?

தமிழ் அரசியலமைப்புச் சட்டம்!

அரசியல் அமைப்புச்சட்டம் நடுவணரசால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு எட்டு ஆண்டுகளாகியும் அதற்குத் தமிழ்நாடு அரசு அக்கறை காட்டவில்லை. இதை நடுவண் உள்துறை துணையமைச்சர் தெரிவித்துள்ளார். இந்தியில் அரசியலமைப்புச் சட்டம் வெளியிட இசைவு கொடுத்தபோது நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க; தி மு.க உறுப்பினர்கள் கொடுத்த திருத்தங்களைப் புறக்கணித்துப் பேசுகையில் அவர், "ஒவ்வொரு மொழியும் அதற்குரிய மதிப்பைப் பெறும்படி பார்த்துக் கொள்வது. என்று தீர்மானம் செய்து, நடுவணரசு எட்டு ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் அரசியல் அமைப்புச் சட்டத்தை மொழி பெயர்த்துத் தமிழ்நாடு அரசின் ஏற்பிசைவிற்கு அனுப்பியிருந்தது. இது குறித்துத் தமிழ்நாடு அரசு தனது கருத்துகளை இதுவரை தெரிவிக்கவில்லை" என்று குறிப்பிட்டுப் பேசியுள்ளார். தமிழுக்கு நலன் செய்து வருவதாகக் கூறி வரும் தமிழ்நாடு அரசு தமிழை எவ்வாறு புறக்கணிக்கிறது என்று நாம் கவனிக்க வேண்டும்.

உலக உருண்டையில் வீடற்றவர்கள்.

அண்மையில் உலக ஒன்றிய (ஐ.நா) அவை வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையின் படி, உலகத்தில் சரியான வீடு இல்லாதவர்கள்: 100 கோடிப் பேர்; தெருவில், நடைபாதையில் வாழ்பவர்கள் 10 கோடிப் பேர்; வானமே கூரையென திறந்த வெளியில் வாழ்பவர்கள் 35 கோடிப் பேர்; மூன்றிலிருந்து பன்னிரண்டு வரையுள்ள அகவையுள்ள 3.5 கோடி சிறுவர்கள் வீடில்லாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

தங்குவதற்கு இடமில்லாதவர்கள் 2, 53, 000 பேர்; கனடாவில் 40,000 பேர்; அமெரிக்காவில் சேரியில் வாழ்பவர்கள் 32 இலக்கம் பேர்; இப்பிகள் 20003; வீடில்லாதவர்கள் 1 கோடியே 80 இலக்கம் பேர்.

உலகில் உள்ள 8 பெரும் நகரங்களில் வீடில்லாதவர் சிக்கல்கள் கீழ்மையாகிக் கொண்டே வருகின்றது. அந்த நகரங்களில் கல்கத்தா, பம்பாய் இரண்டு நகரங்களும் அடங்கும். கல்கத்தாவின் மக்கள் தொகையில் 42 விழுக்காட்டினர்க்கு வீடில்லை. பம்பாயின் மக்கள் தொகையில் சேரிகளில் வாழ்வோர் 38 விழுக்காட்டுப் போர்.

—நன்றி: 'அரும்பு' 4:5.

மொழிப் புரட்சி ஏற்படும்!

இன்று தெருத்தோறும் பெருகிவரும் ஆங்கிலப் பள்ளிகள் எல்லாம் உடனே தமிழ்வழிப் பள்ளிகளாகத் திருந்த வேண்டும். உரிமை பெற்ற நாட்டில், ஆங்கிலப் பள்ளிகள் வேற்று நாட்டு மோகங்களைப் பச்சையுள்ளங்களில் விதைக்கும் நச்சுப் பண்ணைகள், இந்நாட்டுப்பற்றைப் புதைக்கும் கல்லறைகள். இவற்றை அரசு முழுமையாகத் தடை செய்ய வேண்டும். மக்களும் உண்மையுணர வேண்டும். திருந்தாவிட்டால் புரட்சி ஏற்படும்.

தமிழ்ஒன்றே தமிழ்நாட்டில் சிறுமழலைப்பள்ளி முதல் கல்லூரிப் பல்கலைக்கழகம் வரை பயிற்று மொழியாகுக. தமிழோடு எவ்வளவு பிற மொழிகளையும் துணை மொழிகளாகக் கற்கலாம். தமிழுக்கு முன்னிடம், பிறவற்றிற்குப் பின்னிடம்.

40 ஆண்டுக்குமுன் ஆட்சி இந்தியர் கைக்கு மாறியதேயன்றி, கல்வி இந்திய மொழிகட்கு இதுவரை மாறவில்லை. பள்ளித் தீண்டா மொழிகளாக வெளியே நிற்கின்றன. நம் மொழிகள் எங்கும் பள்ளி நுழைக. வளர்க.

பர். வ. சுப. மாணிக்கனர்.

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

— அதே நாளில் கிரான், வாழைச்சேனை, சந்திவெளி, முறக் கொட்டாஞ்சேனை, வந்தாறுமூலை ஆகிய இடங்களில் ஏராளமான இளம் பெண்கள் கற்பழிக்கப் பட்டதுடன், அவர்களின் உடைகளைப் பெற்று வீதியில் அம்மணமாக நடக்க வைத்து, நிற்க வைத்து அவமானப்படுத்தியுள்ளனர்.

16, 17-10-87 ஆகிய நாள்களில் மட்டக்களப்பில் 10 இளம் பெண்கள் கற்பழிக்கப் பட்டனர். இவர்களில் 7 பேர் இறந்துள்ளனர். மீதி மூவரின் நிலை கவலைக் கிடமாக உள்ளது. கற்பழிக்கப் பட்ட பெண்களின் உடல்கள் மேல் கடித்துக் குதறப்பட்ட காயங்கள் காணப்பட்டன. மேலும் பல பெண்களைக் காணவில்லை.

— 16-10-87-இல் உரும்பிராய்ப் பகுதியில் 14 பெண்கள் பிடித்துச் செல்லப்பட்டனர். 17-10-87-இல் இரவு உரும்பிராயில் 24 இளம் பெண்கள் பிடித்துச் செல்லப்பட்டனர்.

— இக் கதைகள் இன்றுவரை தொடர்ந்து நடைபெற்ற வண்ணமாகவே உள்ளன. இதை இல்லை என்று எவராகிலும் மறுக்க முடியாது. இந்தியப் படைத்துறையினரின் கொடுமைக்குச் சிங்களரே தாழ் வில்லை என்று யாழ்ப் பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

O இத்தனை அழிம்புகளையும் செய்துவிட்டு, ஒன்றுமே செய்யாதது போலவும், அங்கு அமைதி-காக்க மட்டுமே போனது போலவும், உணவு, மருந்துகள் உதவி செய்து உயிர்களைக் காக்க முற்படுவது போலவும், — புலிகளைப் பிடிக்க மட்டுமே போனவர்கள் போலவும் — பொய்யாகவும், கவடமாகவும் செய்திகளைச் செய்தித்தாள்கள் வழியாகவும், வானொலி, தொலைக்காட்சி வழியாகவும் பரப்புகின்றனர்.

O இப்பொழுதுள்ள நிலையில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியப் படையினர் அங்கு இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. அது மட்டுமல்லாமல், 4000 இந்தியக் காவல்துறைப் படையினர் இலங்கையின் வடக்குப் பகுதியில் பணியாற்றவும் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

O இவர்கள் கப்பல் கப்பலாக உணவுப் பொருள்களையும், மருந்துப் பொருள்களையும் இங்கிருந்து அங்குள்ள மக்களுக்குக் கொண்டு செல்வதாகக் கூறப்படுவது, உண்மையிலேயே அங்குள்ள இந்திய, சிங்களப் படைகளின் பயன் படுத்தத்திற்கே அன்றி வேறு பயனுக்காக அன்று. இவர்களுக்கெனப் பயன்படுத்தியவை போக, எஞ்சியவற்றையே அங்குள்ள பொது மக்களுக்கு வழங்குவதாகப் படம் பிடித்துக் காட்டுகின்றனர். செய்திகள் பரப்புகின்றனர்.

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 15

தமிழினம் மொழி, இன, நாட்டு அடிப்படையில் தன்னை மீட்டுக் கொள்ளாதவரை அதற்கு முன்னேற்றமே இல்லை.

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண். 96. TN/MS (C) 657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5